# சென்னையில் மெட்ரோ ரயில் இயங்கும் நேரம் அறிவிப்பு



சென்னை, செப்.4-

செப்டம்பர் 7 ஆம் தேதி முதல் மெட்ரோ ரயில் சேவை தொடங்கவுள்ள நிலையில் சென்னையில் மெட்ரோ ரயில் சேவை காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை இருக்கும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.

நாடு முழுவதும் 4 ம் கட்ட பொதுமுடக்க தளர்வுகளில் செப்டம்பர் 7ம்தேதி முதல் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது அதேநேரத்தில், 'கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் மெட்ரோ ரயில் நிலையங்கள் மூடப்பட்டிருக்கும். முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியைக் கடைப்பிடிப்பது உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பயணிகள் கடைப்பிடிக்க வேண்டும். மெட்ரோ ரயில் நிலையங்களில் பயணிகளுக்கு முகக்கவசம் விற்பனை செய்யப்படும்' என மெட்ரோ ரயில் பயண வழிகாட்டு நெறிமுறைகள் மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிலையில் சென்னையில் மெட்ரோ ரயில் இயங்கும் நேரம் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, மெட்ரோ ரயில் சேவை காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை இருக்கும். இதில் 'பீக் ஹவர்ஸ்' எனும் காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரையிலும், மாலை 5 முதல் 8 மணி வரையிலும், 5 நிமிடத்திற்கு ஒரு மெட்ரோ ரயிலும், மற்ற நேரங்களில் 10 நிமிடத்திற்கு ஒரு மெட்ரோ ரயிலும் இயங்கும் என சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் தகவல் தெரிவித்துள்ளது.